வேலை வாய்ப்புக்காக பிற மாவட்டங்களில் கேர் ஆஃப் அட்ரஸ்'' மூலமாக பதிவு செய்திருப்பது தெரியும். எனவே குடும்ப அட்டை கொண்டு வர வேண்டும் என்று கட்டாயப் படுத்த வேண்டும் என்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பிட்ரிக்ஸ் டி'சோசா.

முற்பகல் 10.55

DR. BEATRIX D'SOUZA: Honourable Speaker, Sir, Will the Government consider separate registration for women in the employment exchanges to facilitate speedy recruitment under the quota for women in the Government Service?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூல மாக இன்றைக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப் பதே மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்று சொன் னால் பொதுத் துறைகளில் ஏற்படுகின்ற பெரு வாரியான காலியிடங்கள் எல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மற்ற நிறு வனங்கள் மூலமாகத் தான் நிரப்பப்படுகின்றன. எனவே இன்றைக்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ளவர் களுக்கு காத்திருப்பவர்களுக்குரிய வேலை வாய்ப்பை உரு வாக்கித் தர சூழ்நிலை இல்லாத நிலையில் பெண்களுக்கு என ஒவ்வொரு இடத்திலேயும் தனித் தனியாக வேலை வாய்ப்பு அலுவலகங்களை உருவாக்கித் தர இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, திரு ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

276—

கல்வராயன் மலையில் ஜப்பானிய காடை குஞ்சு பொறிப்பு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்.

*10303—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலை யில் டாப்கோ மூலம் ஜப்பானிய காடை குஞ்சு பொறிப்பு மற்றும் வளர்ப்பு பண்ணை நிறுவ அரசு நடவடிக்கை எடுக் குமா?

(ஆ) ஆம், எனில், விவரம் என்ன?

[1993 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காடைகள் வெப்ப நிலையில் வளரக்கூடியவை, குளிர்ப்பகுதிகளிலும், உயரமான கல்லராயன் போன்ற மலைப் பகுதிகளிலும் இவற்றை வளர்க்க இயலாது. குஞ்சுப் பொரிப்பகங்கள் அமைத்தல் தொழில் நுட்ப ரீதியில் ஏற்ற தல்ல. அதில் வளர்ச்சிக் குறைவு குஞ்சுகளின் இறப்புச் சதவிகிதம் அதிகம் ஏற்படும். எனவே கல்லராயன் மலையில் காடை குஞ்சு பொரிப்பு மற்றும் வளர்ப்புப் பண்ணை நிறுவுவதற்கு சாத்திய கூறு இல்லை.

(ஆ) இச்சூழ் நிலையில் வினா எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜப்பான் காடை வளர்ப்பது தற்போது மட்டன் கிலோ 45 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவிலே விற்கின்றது. இந்த கால கட்டத்தில் ஏழைகள் மட்டன் வகையை உண்ணுவதற்கு முடியாமலும், அதே நேரத்தில் மட்டனை சாப்பிடுகின்ற வசதி படைத்தவர்கள் பல பணக்கார நோய்களைப் பெறுவதன் காரணமாக ஜப்பான் காடை போன்ற இந்த காடையினை உணவாகக் கொள்ள இந்த இரண்டு தர மக்களுக்கும், ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் உகந்ததாக இருப்பதால் இந்த ஜப்பான் காடை வகையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல, வெட்ப தட்ப நிலைக்கு ஏற்ற பகுதிகளில் குஞ்சு பொறிப்பையும் மற்றும் வளர்ப்புப் பண்ணையையும் ஏற்படுத்தி இது போன்ற ஏழையெளிய மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற இந்த திட்டத்தை அரசு பரிசிலித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு தங்களுடைய விளை நிலத்தில் வரக்கூடிய வருமானம் போதவில்லை. எனவே வேளாண்மை சார்ந்த கால்நடைகள், அதுபோன்று கோழி, காடைகள் வளர்த்து அதிக வருவாய் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இந்த திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக கோவை மாவட்டத்திலேயும், செங்கை-எம். ஜி. ஆர். மாவட்டத்திலும், இரண்டு இடங்களிலும் காடைக் குஞ்சுகளை பொரித்து விவசாயிகளுக்கு மலிவான விலையில், லாபமற்ற விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் அந்த குஞ்சுகளை வளர்த்து அதன் மூலமாக வருவாய் பெற வேண்டுமென்பதற்காக அதற்கு வேண்டிய பயிற்சியையும் அரசு கொடுத்து வருகிறது. இந்த பயிற்சியில் ஈடு பெற வேண்டுமென்பதற்காக அதற்கு வேண்டிய பயிற்சியையும் அரசு கொடுத்து வருகிறது. இந்தப் பயிற்சியில் ஈடுபடு

1993 ஏப்ரல் 7]

கின்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பெறுகிறது. இதுவரை 30 விவசாயிகள் பயிற்சிபெற்று பலன் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பயிற்சியை தென் ஆற்காடு மாவட்டத்திலே தொடங்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலே உள்ள மக்கள் இந்த பயிற்சியைப் பெற வர விரும்புவார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு அருகிலே இருக்கக் கூடிய செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

277—

தருமபுரி மாவட்டப் பகுதிகளில் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள்.

*14537—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி, காவேரிப்பட்டினம் பகுதிகளில் அதிக விளைச்சல் தரும் தென்னை மரங்கள் பூச்சிகளால் பாதிக்கப்பெற்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், காவிரிப்பட்டினம், கிருட்டிண கிரி பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள், பூச்சிகளாலும், நோயினாலும் கடுமையான நிலையில் பாதிக்கப்படவில்லை.